**EASTERN UNIVERSITY SRI LANKA**

**FACULTY OF COMMERCE AND MANAGEMENT**

**External Degree**

# Part III (4$^{TH}$) Examination in Bachelor of Economics- 2009/2010 (May 2013)

**(Proper/Repeat)**

**EXB - 405/ EXEOC - 4013 Project Management**

Answer all Questions — Time: 3 hours

Q1. a) "செயற்திட்டம்" "நிகழ்ச்சித்திட்டம" என்ற பதங்களுக்கு வரைவிலக்கணம் கூறி, இவ்விரண்டு பதங்களையும் பொருத்தமான உதாரணங்கள் மூலம் ஒப்பிட்டு வேறுபடுத்துக.

(08 புள்ளிகள்)

b) "செயற்திட்ட அடையாளம் காணல்" செயற்திட்ட வாழ்கை வட்டத்தில் முதல் படியாகும்". இக்கருத்தின் அடிப்படையில் ஓர் வினைத்திறனான செயற்திட்ட அடையாளம் காணலில் காரண-முடிவு (Means-Ends) பகுப்பாய்வின் பயன்பாட்டினை பொருத்தமான உதாரணம் மூலம் விளக்குக.

(12 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

Q2. a) "செயற்திட்ட ஆவணப்படுத்தல்" என்ற பதத்திற்கு வரைவிலக்கணம் கூறி ஓர் செயற்திட்ட ஆவணப்படத்தலில் கருத்திலெடுக்கப்பட வேண்டிய பிரதான காரணிகளை விளக்குக.

(10 புள்ளிகள்)

b) "தர்க்கரீதியான கட்டமைப்புத் தாயம்" என்ற பதத்தினையும், செயற்திட்ட திட்டமிடலாளர்கள் தர்கரீதியான கட்டமைப்புத் தாயத்தினை தயாரிக்கின்றபோது கருத்திலெடுக்கப்படவேண்டிய பிரதான காரணிகளையும் பொருத்தமான உதாரணத்துடன் சுருக்கமாக விளக்குக.

(10 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

Q3 a) "செயற்திட்ட பின்மதிப்பீடு" என்ற பதத்திற்கு வரைவிலக்கணம் தந்து, செயற்திட்ட பின்மதிப்பீட்டினை மேற்கொள்ளும்போது தகவல் சேகரிப்பிற்கு பயன்படும் நுட்பங்களை பொருத்தமான உதாரணங்கள் தந்து விளக்குக.

(10 புள்ளிகள்)

b) செயற்திட்ட பின்மதிப்பீட்டின் நோக்கத்தினையும், செயற்திட்ட பின்மதிப்பீட்டினை மேற்கொள்ளும்போது தகவல் சேகரிப்பிற்கு பயன்படும் நுட்பங்கள் கொண்டிருக்கவேண்டிய சிறப்பம்சங்களையும் விளக்குக.

(10 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

Q4. ஓர் தனியார் வியாபார நிறுவனம் தனது வியாபார முயற்சியினை மூன்று தொழிற்சாலைகளையும் நான்கு களஞ்சியசாலைகளையும் கொண்டு இயங்கி வருகின்றது.

தொழிற்சாலைகளின் உற்பத்திகள் 000' அலகுகளில் பின்வருமாறு:

F1 = 95 அலகுகள் F2 = 150 அலகுகள் F3 = 75 அலகுகள்.

களஞ்சியசாலைகளின் கேள்விகள் 000' அலகுகளில் பின்வருமாறு:

X=100 அலகுகள், Y=70 அலகுகள், W=75 அலகுகள், Z= 75 அலகுகள்

உற்பத்தி தொழிற்சாலையிலிருந்து ஒவ்வொரு களஞ்சியசாலைகளுக்குமான ஒரு அலகினை கொண்டுசெல்லும் செலவு கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

| | W | X | Y | Z |
|---|---|---|---|---|
| F1 | 10 | 10 | 40 | 20 |
| F2 | 20 | 00 | 20 | 10 |
| F3 | 60 | 40 | 10 | 10 |

a) மேற்கூறப்பட்ட தகவல்களை பயன்படுத்தி குறித்த நிறுவனத்திற்கான செலவினை சிக்கனப்படுத்தக்கூடிய உத்தம தீர்வினை கணிப்பிடுக.

(12 புள்ளிகள்)

b) இத்தீர்விற்கான ஆகக்குறைந்த மொத்தச் செலவினை கணிப்பிடுக.

(04 புள்ளிகள்)

(மொத்தம் 16 புள்ளிகள்)

Q5

இலங்கை கிழக்குப் பல்கலைக்கழகத்தின் வெளிவாரி கற்கைகள் நிலையம் புதிய கட்டிட நிர்மானத்தினை மேற்கொண்டு அதற்குள் தமது செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கு திட்டமிட்டுள்ளது. இச்செயற்பாடுகளுக்கான நடவடிக்கைகளும் அதற்கான மனிதவள தேவைகள் பற்றிய தகவல்களும் கீழே தரப்பட்டுள்ளது.

| Activity | Preceding activity | Duration (days) | No. of men |
|---|---|---|---|
| A | - | 2 | 5 |
| B | A | 3 | 6 |
| C | A | 4 | 4 |
| D | A | 2 | 6 |
| E | D | 4 | 8 |
| F | C | 2 | 5 |
| G | C | 6 | 4 |
| H | B | 6 | 7 |
| I | F | 5 | 3 |
| J | E, G | 4 | 3 |
| K | I, J | 4 | 6 |
| L | E, G | 3 | 2 |
| M | K | 3 | 11 |

மேற்கூறப்பட்ட தகவல்களை பயன்படுத்தி கீழ் கொடுக்கப்பட்டுள்ள வினாக்களுக்கு விடையளிக்குக.

a) வலைப்பின்னல் வரைபினை வரைந்து சாதுரிய மார்க்கத்தினை குறிப்பிடுக.

(10 புள்ளிகள்)

b) இச் செயற்பாடுகளுக்கான மனிதவளத்தேவையினை கணிப்பிடுக.

(06 புள்ளிகள்)

c) மனிதவளத்திற்கான கிடைப்பனவு நாளொன்றுக்கு 16 மனிதர் எனின் எவ்வாறு நடவடிக்கைகளை அட்டவணைப்படுத்துவீர்.

(08புள்ளிகள்)

(மொத்தம் 24 புள்ளிகள்)